சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

# தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 10

சுருக்கமான விடை எழுதுக

1.'ஒருவர் ஒருவராகவோ ,இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்'

அ.இக்கூற்றை கூறியவர் யார்?

ஆ.இதில் எத்தனை அடுக்குத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன?

2."விலங்கி யற்கை யிலையெனில் யாமெல்லாம் விரும்பு மட்டினில் விண்ணுறலாகுமே."

அ.விலங்கியற்கை" எனக் கருதப்படுவது யாது?

ஆ.இங்கு "விண்ணுறல் "என்பது எதனைக் குறிக்கின்றது?

3."வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே!"

அ."வெங்கட்பிறை" எனக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ.இங்கு இடம்பெற்றுள்ள உருவகம் யாது?

4."வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்"

அ.இங்கு ஆண்குரங்கைக் குறித்து நிற்கும் சொல் யாது?

ஆ."வான்கவிகள்" என்போர் யாவர்?

5."ரயலிருப்பு மிம் மூன்று நன்மை பயத்தலே"

அ.நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?

ஆ.இப்பாடல் யாரால் பாடப்பட்டது?

6."பணி" என்ற சொல்லைக் கொண்டு பெயராகவும்; வினையாகவும் தனிதி தனியாக இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

7.'வெட்கத்தை விட்டுக் கூறுகிறான் கண்ணன்' இவ் வாக்கியத்தில் எழுவாய்: பயனிலை யாது?

8.'நீரெ டுத்து வருதற் கவள்மணி" என்ற தொடரை சந்தி பிரித்து எழுதுக.

9.நான் வாழ ஒரு தொழிலாவது கிடைக்காதா என ஏங்கி நிற்கிறேன். இவ் வாக்கியத்திலுள்ள இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு எழுதுக

10. 'கொங்கர்க்கு கமரர் பதியளித்த கோவே! ரூாச குலதிலகா"

அ.இவ்வரிகளில் கூறப்படும் மன்னன் எந்த நாட்டு மன்னன்?

ஆ.இவ்வரிகளில் கூறப்படும் மன்னனின் சிறப்புக்கள் எவை?